## இராசிபுரம் நகராட்சி

## நகர்மன்ற சாதாரணக் கூட்ட அறிவிப்பு

2022–ஆம் வருடம் ஜூன் மாதம் 29–ஆம் தேதி புதன் கிழமை முற்பகல் 11.00 மணிக்கு இராசிபுரம் நகராட்சியின் சாதாரணக் கூட்டம் ஒன்று நகர்மன்ற கூட்ட அரங்கில் நடைபெறவுள்ளது.

அது சமயம் கீழ்க்கண்டப் பொருள்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

இராசிபுரம் நகராட்சி<br>நாள் : 24.06.2022

தலைவர்,<br>நகர் மன்றம்.

### பொருள்கள்

(1) இராசிபுரம் நகராட்சி உள்ளாட்சித் தேர்தலில் திருமதி கலாவதி, க/பெ. சிவக்குமார், க.எண். 15எ, லிங்கப்பா தெரு, இராசிபுரம் என்பவர் திருமதி கவிதா, த/பெ. ராமசாமி பெயரில் ஒரு கடையும் திருமதி கவிதா, க/பெ. சங்கர் பெயரில் ஒரு கடையும் ஆக இரண்டு நகராட்சிக் கடைகளை குத்தகைக்கு எடுத்துள்ளார் எனவும் இது 49(2) (c) (1) தமிழ்நாடு முனிசிபாலிட்டி ஆக்ட் 1920–இன்படி குற்றமாகும். எனவே, திருமதி கவிதா, க/பெ. சங்கர் என்பவர் வேட்பு மனுவை நிராகரிக்க வேண்டுமென சென்னை உயர்நீதி மன்றத்தில் நீதிப்பேராணை எண். 2967/2022–இல் வழக்கு தொடரப்பட்டது. மேற்படி வழக்கு உயர்நீதி மன்றத்தில் 15.02.2022–இல் தள்ளுபடி செய்யப்பட்டது. வழக்கு கட்டணமாக ரூ. 11429/– செலுத்தக் கோரி நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதத்தில் தெரிவித்துள்ளார். எனவே, ரூ. 11429/– செலுத்த மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்றத் தலைவர் முன் அனுமதி பெற்று தொகை வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.

(அ5/4021/21)

**தீர்மானம் எண். 95**

அனுமதிக்கப்பட்டது.

( 2 ) நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் அலுவலகத்தின் கடிதம் ந.க.எண். 5094/2022/டிபி3, நாள் 08.03.2022 மற்றும் 19.04.2022–இன்படி நகராட்சிப் பகுதிகளிலுள்ள பூங்காக்கள், விளையாட்டுத் திடல் மற்றும் திறவெளியிடம் ஆகியவற்றினை தமிழ்நாடு பூங்காக்கள், விளையாட்டு மைதானங்கள் மற்றும் திறந்தவெளி இடங்கள் (பாதுகாப்பு மற்றும் முறைப்படுத்துதல்) சட்டம் 1959 பிரிவு 3–இன்படி தயார் செய்து அரசிதழ் வெளியிடப்பட வேண்டுமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட விவரப்படி, நகராட்சிக்குட்பட்டப் பகுதிகளிலுள்ள, மனைபிரிவுகளின் பூங்காக்கள், விளையாட்டு மைதானங்கள், திறவிடங்கள் ஆகியவற்றின் வரைபடங்கள் A4 வடிவத்தில் உரிய விவரங்களுடன் 45 எண்களுக்கு 6 செட் வரைபடங்கள் தயார்செய்யும்

பணியினை அரவிந்த் அசோசியேட்ஸ், இராசிபுரம் அவர்களின் வழியாக செய்யப்பட்டது. இப்பணிக்கு, மேற்படி நிறுவனத்திடமிருந்து பெறப்பட்டுள்ள செலவினத்தொகை ரூ.14000/—க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**

அனுமதி வழங்கலாம். மேற்படி பணியின் அவசியம் கருதி நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று அனுமதி வழங்கலாம்.

(1772/2022/எப்1)

**தீர்மானம் எண். 96**

அனுமதி வழங்கப்பட்டது.

(3) மாண்புமிகு நகராட்சி நிர்வாக துறை அமைச்சர் அவர்களின் சட்டமன்ற அறிக்கை நாள் 07.04.2022—இன்படி சாலையோர வியாபாரிகளுக்கான திட்டம் (Street vendors Welfare)

தகுதியான சாலையோர வியாபாரிகளின் சமூக பாதுகாப்பு மற்றும் வாழ்வாதாரத்தை உறுதி செய்திட நடப்பாண்டில் (2022—2023) புதிய கணக்கெடுப்பு நடத்தப்பட்டு அடையாள அட்டை வழங்கவும் பொதுமக்கள் எவ்வித சிரமமுமின்றி வியாபாரம் செய்வதற்கு ஏற்ற சூழல் உருவாக்கப்படுமென அறிவிக்கப்பட்டது. நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண். 20789/2021/UPA1 நாள் 16.06.2022—இல் சாலையோர வியாபாரிகளை புதியதாக கணக்கெடுப்பு செய்து அவர்களுக்கு அடையாள அட்டை (Identity cards) biometric ID cards வழங்கவும் மற்றும் vending plan, MIS solution தயார் செய்யவும் தெரிவிக்கப்பட்டதற்கிணங்கவும் மேற்கண்ட இனங்கள் தயார் செய்ய ஒப்பந்தப்புள்ளிக் கோரி பணி மேற்க்கொள்ள ஆகும் செலவினத்திற்கும் மன்றத்தின் முன் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) அவசர அவசியம் கருதி நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோருவதற்கும் மன்றம் அனுமதிக்கலாம்.

(எப்1/1434/2016)

**தீர்மானம் எண். 97**

அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

( 4 ) இராசிபுரம் நகராட்சிக்குட்பட்ட பெரிய கடைவீதியிலுள்ள தினசரி மார்க்கெட் கடைகளான சுமார் 60, 70 ஆண்டுகளுக்கு முன்னர் கட்டப்பட்டதால் மிகவும் பழுதடைந்த நிலையிலுள்ளது. எனவே, இராசிபுரம் கிராமம், வார்டு—சி, பிளாக் எண். 12, நகரளவை எண். 90, 53, 54, 55, 128—இல் அமைந்துள்ள தினசரி மார்க்கெட் கடைகளை அகற்றிவிட்டு புதியதாக புதுப்பித்துக் கட்டும் பணியினை (KNMT) கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் செயல்படுத்தும் பணிக்கு ஆணை பெறப்பட்டுள்ளது. எனவே, தினசரி மார்க்கெட் கடைகளை புதியதாக கட்டும் பணி தொடர்பாக உரிய கட்டட வரைபடங்களை தயார் செய்து கணினி வழியாக edcr முறையில் வரைபடங்களை பதிவேற்றம் செய்யவும், மேலும் Daily Market வரைபடத்திற்கு உதவி இயக்குநர், நகர் ஊரமைப்புத் துறை, நாமக்கல் அவர்களின் அலுவலகத்திற்கு (civic design) வரைபடத்துடன் உரிய கூடுதல் ஆவணங்களை சமர்ப்பித்து உரிய Type design approval பெறும் பணியின் அரவிந்த் அசோசியேட்ஸ், இராசிபுரம் என்பவர்

வழியாக பணியினை மேற்க்கொள்ளவும், அதற்காகும் உத்தேச செலவினம் ரூ. 80000/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

மன்றம் அனுமதிக்கலாம். நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணியினை மேற்கொண்டமைக்கும் மன்றம் அனுமதிக்கலாம்.

(எப்1/2300/22)

**தீர்மானம் எண். 98**

அனுமதிக்கப்பட்டது.

(5) இராசிபுரம் நகராட்சி அலுவலர்கள் மற்றும் தூய்மைப் பணியாளர்களின் வருகைப் பதிவு செய்வதற்கான Bio Metric இயந்திரம் பழுது சரி செய்தல் ரூ. 80000/– மதிப்பீட்டுப் பணிக்கு **31.05.2022–இல்** பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் விவரங்கள் பின் வருமாறு.

1) M/s. GSC Technology and Services, 390, DR Complex, Pallipalayam Road, Komarapalayam. – ரூ. **78350.00** விலைப்புள்ளி குறைவு.

2) M/s. Perennid Systems, 25/15, Swarnapuri, Salem – ரூ. **79950.00** விலைப்புள்ளி அதிகம்.

மதிப்பீட்டைவிட ரூ. **78350.00** குறைவான விலைப்புள்ளி அளித்த M/s. GSC Technology and Services, ஒப்பந்ததாரர் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று பணியினை மேற்க்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**

மதிப்பீட்டைவிட ரூ. **78350.00** குறைவான விலைப்புள்ளி அளித்த M/s. GSC Technology and Services, ஒப்பந்ததாரர் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று பணி மேற்க்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(இ2/1819/2022)

**தீர்மானம் எண். 99**

அனுமதிக்கப்பட்டது.

(6) இராசிபுரம் நகராட்சி அலுவலம், அரசு மருத்துவமனை, அம்மா உணவகம் மற்றும் பாரதிதாசன் சாலையில் அமைந்துள்ள நகராட்சிப் பள்ளி ஆகியவற்றிற்கு பாதாள சாக்கடை இணைப்பு செய்யும் ரூ. **330000/–** மதிப்பீட்டுப் பணிக்கு **31.05.2022–இல்** பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் விவரங்கள் பின் வருமாறு.

1) திரு RS. ரங்கசாமி, ஒப்பந்ததாரர், இராசிபுரம் – மதிப்பீட்டைவிட **0.16%** அதிகம்.

2) M/S. Tamil Nadu Water Supply and Drainage System ஒப்பந்ததாரர், இராசிபுரம் – மதிப்பீட்டைவிட **0.12%** குறைவு.

மதிப்பீட்டைவிட 0.12% குறைவான M/S. Tamil Nadu Water Supply and Drainage System ஒப்பந்ததாரர் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று பணியினை மேற்க்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**

மதிப்பீட்டைவிட 0.12% குறைவான M/S. Tamil Nadu Water Supply and Drainage System ஒப்பந்ததாரர் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று பணி மேற்க்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(இ2/1990/2022)

**தீர்மானம் எண். 100**

அலுவலகக்குறிப்பு ஏற்க்கப்பட்டது.

(7) இராசிபுரம் நகராட்சி வார்டு எண். 4, 5, 14, 20, 26 ஆகியப் பகுதிகளில் பகிர்மானக் குழாய் நீட்டிப்பு செய்தல் மற்றும் ஆழ்துளைக் கிணறு மூலம் உப்பு நீர் வசதி ஏற்படுத்தல் ரூ. 265000/– மதிப்பீட்டுப் பணிக்கு 31.05.2022–இல் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் விவரங்கள் பின் வருமாறு.

1) வர்ஷா குருப் ஆப் கன்ஸ்ட்ரக்ஷன், ஒப்பந்ததாரர், நாமக்கல். – மதிப்பீட்டைவிட 0.08% குறைவு.
2) திரு KG. சீனிவாசன், ஒப்பந்ததாரர், நாமக்கல். – மதிப்பீட்டைவிட 1.10% அதிகம்.

மதிப்பீட்டைவிட 0.08% குறைவான திரு. வர்ஷா குருப் ஆப் கன்ஸ்ட்ரக்ஷன், ஒப்பந்ததாரர் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று பணியினை மேற்க்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**

மதிப்பீட்டைவிட 0.08% குறைவான திரு. வர்ஷா குருப் ஆப் கன்ஸ்ட்ரக்ஷன், ஒப்பந்ததாரர் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று பணி மேற்க்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(இ2/1458/2022)

**தீர்மானம் எண். 101**

அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

(8) இராசிபுரம் நகராட்சி வார்டு எண்.17 பெருமாள் கோவில் அருகிலுள்ள சின்டெக்ஸ் டேங் பிளாட்பாரம் பழுது மற்றும் மோட்டார் மீட்டர் போர்டு பழுது சரிசெய்தல் ரூ. 40000/– மதிப்பீட்டுப் பணிக்கு 31.05.2022–இல் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் விவரங்கள் பின் வருமாறு.

1) திரு என். செல்லப்பன், ஒப்பந்ததாரர், இராசிபுரம் – மதிப்பீட்டைவிட 0.18% குறைவு.
2) திருமதி சாகிதா, ஒப்பந்ததாரர், இராசிபுரம் – மதிப்பீட்டைவிட 1.83% அதிகம்.

மதிப்பீட்டைவிட 0.18% குறைவான திரு. என். செல்லப்பன், ஒப்பந்ததாரர் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று பணியினை மேற்க்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**

மதிப்பீட்டைவிட **0.18%** குறைவான திரு என். செல்லப்பன், ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று பணி மேற்க்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**(இ2/1733/2022)**

**தீர்மானம் எண். 102**

அனுமதிக்கப்பட்டது.

**( 9 )** இராசிபுரம் நகராட்சி வார்டு எண். **27** காமராஜ் காலனி வழியாக செல்லும் பிரதான குடிநீர் குழாயில் லைன் பூஸ்டர் அமைத்தல் பணி ரூ. **180000/–** மதிப்பீட்டுப் பணிக்கு **10.06.2022–**இல் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் விவரங்கள் பின் வருமாறு.

1) M/S Varsha Group of Construction,
ஒப்பந்ததாரர், நாமக்கல். – மதிப்பீட்டைவிட **0.15%** குறைவு.

2) M/S Sumathi Infratech Construction ,
ஒப்பந்ததாரர், நாமக்கல். – மதிப்பீட்டைவிட **0.60%** அதிகம்.

மதிப்பீட்டைவிட **0.15%** குறைவான M/S. Varsha Group of Construction, ஒப்பந்ததாரர் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று பணியினை மேற்க்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**

மதிப்பீட்டைவிட **0.05%** குறைவான M/S. Varsha Group of Construction ஒப்பந்ததாரர் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று பணி மேற்க்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**(இ2/2021/2022)**

**தீர்மானம் எண். 103**

அனுமதிக்கப்பட்டது.

**( 10 )** நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களது கடிதம் ந.க.எண். **11919/2022/**CFC நாள் **15.05.2022–**இல் **15–**ஆவது மத்திய நிதிக்குழு மான்யம் **2022–2023** Tied Grant ரூ. **79.00** இலட்சமும் Un-Tied Grant ரூ. **53.00** இலட்சமும் இராசிபுரம் நகராட்சிக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அதில் Un-Tied Grant ரூ. **53.00** இலட்சத்திற்கு புதியதாக LED தெரு விளக்கு அமைக்கும் பணிக்கு ஏற்கனவே நகராட்சி நிர்வாக இயக்குநர் (ந.க.எண். **31114/ 2022/**அம்ருத்**–2** நாள் **29.03.2022)** அவர்களால் ஒதுக்கீடு செய்யப்பட்டு தொடர் நடவடிக்கையில் உள்ளது. Tied Grant - ரூ. **79.00** இலட்சதிற்கு கீழ்க்காணும் பணிகள் மேற்கொள்ள தேர்வு செய்யப்பட்டுள்ளது.

| வ. எண் | மான்ய விவரம் | வேலையின் பெயர் | மதிப்பீடு தொகை ரூ. இலட்சத்தில் |
|---|---|---|---|
| 1 | Tied Grant (50% SWM) | வ.உ.சி நகரில் மின்கலன் வண்டிகளுக்கு மின்னேற்றும் நிலையம், துண்டாக்கும் இயந்திரத்திற்கான கூடம் மற்றும் கிடங்கு அமைத்தல். (Construction of BOV Charging point, Shredder machine shed with Godown at VOC Nagar) | 35.20 |

| | | | |
|---|---|---|---|
| 2 | | புதியதாக 2 இலகுரக வாகனங்கள் வாங்குதல் (Purchase of 2 Light motor vehicle) | 16.00 |
| மொத்தம் | | | 51.20 |
| 4 | Tied Grant (50% WS) | குடிநீர் விநியோகத்திற்கு குளோரின் வாயு மூலம் குளோரினேசன் அமைப்பு ஏற்படுத்துதல். (Supply & Fixing Gas Chorination System in pumping main | 9.80 |
| 5 | | மேல்நிலைத் தொட்டி மற்றும் குடிநீர் பகிர்மானக் குழாய்களில் பழுதடைந்துள்ள 13 சுலீஸ் வால்வுகள் மாற்றுதல் மற்றும் 2 சுலீஸ் வால்வுகள் பழுது சரி செய்தல். (Replacement of 13 Nos existing sulice valves and repairs of 2 Nos sulice valves at OHT and distribution system) | 18.00 |
| மொத்தம் | | | 27.80 |
| மொத்தம் (SWM மற்றும் WS) | | | 79.00 |

15–ஆவது மத்திய நிதிக்குழு (Tied Grant) மான்ய நிதியின்கீழ் ரூ. 79.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்காணும் பணிகள் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகின்றது. நகர் மன்றத் தலைவரின் முன்அனுமதி பெற்று நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களுக்கு முன்மொழிவுகள் அனுப்பப்பட்டதற்கு மன்ற ஒப்புதல் வேண்டப்படுகின்றது.

**அலுவலகக் குறிப்பு :**

அ) ரூ.79.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்காணும் பணிகள் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) நகர் மன்றத் தலைவரின் முன்அனுமதி பெற்று நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களுக்கு முன்மொழிவுகள் அனுப்பப்பட்டதற்கு மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

(2183/22/இ2)

**தீர்மானம் எண். 104**

அலுவலகக்குறிப்பு ஏற்க்கப்பட்டது.

( 11 ) இராசிபுரம் நகராட்சியில் அமைந்துள்ள வார்டு எண்–19, காட்டூர், காட்டுக்கொட்டாய் பகுதிகளில் பாதாளசாக்கடை இணைப்பு அமைக்க வேண்டியுள்ளது. எனவே, மேற்கண்ட பணிக்காக தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.12.00 இலட்சம் ஆகும். மேற்கண்ட பணியினை நமக்கு நாமே திட்டத்தின் கீழ் நிதி ஒதுக்கீடு செய்யவும் நிர்வாக அனுமதி வேண்டி நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு அனுப்ப மன்ற அனுமதி வேண்டி ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது. இத்திட்டப்பணிக்கு இராசிபுரம் நகர பொதுமக்கள் 33 1/3 % தொகையை பகிர்ந்துக்கொள்ள ஒப்புதல் தெரிவித்து தொகை ரூ.4.00 இலட்சம் செலுத்தியுள்ளனர். எனவே, ரூ.12.00 இலட்சம் மதிப்பீட்டில் வார்டு எண்–19, காட்டூர், காட்டுக்கொட்டாய் பகுதிகளில் பாதாளசாக்கடை இணைப்பு அமைக்க வேண்டி மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. நகர் மன்ற தலைவரின் முன்அனுமதி பெற்று நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களுக்கு முன்மொழிவுகள் அனுப்பப்பட்டதற்கு மன்றம் அங்கீகாரம் வேண்டப்படுகின்றது.

அலுவலகக் குறிப்பு :

அ) ரூ.12.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்காணும் பணிகள் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) நகர் மன்றத் தலைவரின் முன்அனுமதி பெற்று நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களுக்கு முன்மொழிவுகள் அனுப்பப்பட்டதற்கு மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

(1842/22/இ2)

**தீர்மானம் எண். 105**

அலுவலகக்குறிப்பு ஒப்புதல் வழங்கப்பட்டது.

( 12 ) இராசிபுரம் நகராட்சியில் பாதாள சாக்கடைத் திட்டத்தின் கீழ் 6.96 MLD கொள்ளளவு கொண்ட கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைந்துள்ளது. இக்கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் மாதிரி ஓட்ட காலத்தில் (Trail run) பராமரிக்கப்பட்டு வருகிறது. நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களது கடிதம் ந.க.எண். 17021/2021/EA1, நாள் 10.03.2022 இல் தெரிவித்துள்ளவாறு கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தில் இணைய வழி கண்காணிப்பு அமைப்பு (Online Continuous Effluent Monitoring System OCEMS) அமைப்பினை ரூ. 45.00 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்க நிர்வாக அனுமதி வேண்டி நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், சேலம் அவர்களுக்கு நகர்மன்றத் தலைவரின் முன் அனுமதி பெற்று முன்மொழிவுகள் அனுப்பப்பட்டதற்கு மன்ற அங்கீகாரம் வேண்டப்படுகிறது.

அலுவலக **குறிப்பு:**

நகர்மன்றத் தலைவரின் முன் அனுமதி பெற்று முன்மொழிவுகள் அனுப்பப்பட்டதற்கு மன்றம் அங்கீகரிக்கலாம்.

(2241/21/இ2)

**தீர்மானம் எண். 106**

அங்கீகரிக்கப்பட்டது.

( 13 ) இராசிபுரம் நகராட்சியின் மாண்புமிகு தமிழக முதல்வர் திரு மு.க. ஸ்டாலின் அவர்களது அரசின் ஓராண்டு சாதனை விவரங்களை மாலைமலர் சிறப்பு மலரில் வெளியிட்டதற்கான விளம்பரக் கட்டணம் ரூ. **9900.00** செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகின்றது.

<u>அலுவலகக் குறிப்பு:</u>

மன்றம் அனுமதிக்கலாம்.

(1337/2022/இ1)

**தீர்மானம் எண். 107**

அனுமதிக்கப்பட்டது.

( 14 ) நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களது கடிதம் ந.க.எண். 9511/2022/எஸ்பிஎம்; நாள் 19.04.2022–இல் தெரிவித்துள்ளவாறு இராசிபுரம் நகராட்சி எல்லைக்குட்பட்ட காளி தெரு பகுதியில் ரூ.19.28 இலட்சம் மதிப்பீட்டில்

புதியதாக சமுதாய கழிப்பிடம் புதுப்பித்தல் பணி மேற்கொள்ள விரிவான திட்ட அறிக்கை தயார் செய்யப்பட்டு நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், சேலம் அலுவலக தொலைபேசி தகவலுக்கிணங்க மேற்படி பணியினை தமிழ்நாடு சட்டமன்ற அறிவிப்பு 2022–23 இன் படி வருவதால் நகர் மன்றத் தலைவரின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகின்றது.

அலுவலக குறிப்பு:

அ) மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

ஆ) நகர் மன்றத் தலைவரின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

(1755/21/இ1)

**தீர்மானம் எண். 108**

ஒப்புதல் வழங்கப்பட்டது.

(15) இராசிபுரம் நகராட்சி தற்காலிக தினசரி மார்க்கெட் அமைக்க பழைய பேருந்து நிலையத்தை சமன் செய்து WMM நிரப்பும் பணி செய்தல் ரூ. 1.25 இலட்சம் மதிப்பீட்டு வருவாய் நிதிப் பணிக்கு 31.05.2022–இல் வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளின் விவரங்கள் வருமாறு.

1) திரு ஆர். பிரகாசம்,
ஒப்பந்ததாரர், மசக்காளிப்பட்டி – மதிப்பீட்டைவிட 0.15 % குறைவு.

2) திரு ஆர். பெரியசாமி,
ஒப்பந்ததாரர், மசக்காளிப்பட்டி – மதிப்பீட்டைவிட 3.05 % அதிகம்.

மதிப்பீட்டைவிட 0.15% குறைவான திரு ஆர். பிரகாசம் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று பணியினை மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. இப்பணியின் அவசர அவசியம் கருதி நகர் மன்றத் தலைவரின் முன் அனுமதி பெற்று திரு ஆர். பிரகாசம் ஒப்பந்ததாரருக்கு பணி ஆணை வழங்கப்பட்டதற்கு மன்றத்தின் அங்கீகாரம் வேண்டப்படுகின்றது.

அலுவலகக் குறிப்பு :

அ) மதிப்பீட்டைவிட 0.15% குறைவான திரு ஆர். பிரகாசம் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று பணி மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) நகர் மன்றத் தலைவரின் முன் அனுமதி பெற்று திரு ஆர். பிரகாசம், ஒப்பந்ததாரருக்கு பணி ஆணை வழங்கப்பட்டதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

(2008/22/இ1)

**தீர்மானம் எண். 109**

அங்கீகரிக்கப்பட்டது.

( 16 ) இராசிபுரம் நகராட்சி புதியதாக வாரச்சந்தை அமைக்க வரைபடத்தின் விரிவான திட்ட அறிக்கை தயாரித்தல் பணி ரூ. 1.20 இலட்சம் மதிப்பீட்டிலான வருவாய் நிதிப் பணிக்கு 07.06.2022–இல் வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளின் விவரங்கள் வருமாறு.

1) ஸ்மார்ட் பில்டர்ஸ்,
காமராஜ் நகர், திருப்பூர் – ரூ.1,18,000/–

2) ஜனனம் டிசைன் & பில்டர்ஸ்
பழனி பைபாஸ், திண்டுக்கல் – ரூ.1,19,500/–

மதிப்பீட்டைவிட குறைவான விலைப்புள்ளி அளித்துள்ள ஸ்மார்ட் பில்டர்ஸ், திருப்பூர் ஒப்பந்ததாரது ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று பணியினை மேற்க்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு :
மதிப்பீட்டைவிட குறைவான விலைப்புள்ளி அளித்துள்ள ஸ்மார்ட் பில்டர்ஸ், திருப்பூர், ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று பணி மேற்க்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(1730/22/இ1)

**தீர்மானம் எண். 110**

அனுமதிக்கப்பட்டது.

( 17 ) நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களது கடிதம் 5990/2022/எஸ்பிஎம். நாள் 11.04.2022–இன்படி இந்நகராட்சிக்கு வார்டு எண். 5 இந்திரா நகர் பகுதியில் தூய்மை பாரத இயக்கம் 2.0 திட்டத்தின் கீழ் ரூ. 18.64 இலட்சம் மதிப்பீட்டில் சமுதாய கழிப்பிடம் கட்டுதல் பணி ரூ. 18.64 இலட்சம் மதிப்பீட்டிலான மேற்கொள்ள 25.05.2022–இல் வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளின் விவரங்கள் வருமாறு.

1) M/s. சுமதி இன்ஃப்ராடெக் கன்ஸ்ட்ரக்ஷன்,
இராசிபுரம் – மதிப்பீட்டைவிட 0.09% குறைவு.

2) M/s வர்ஷா குரூப் ஆஃப் கன்ஸ்ட்ரக்ஷன்,
நாமக்கல் – மதிப்பீட்டைவிட 0.21 % அதிகம்.

மதிப்பீட்டைவிட 0.09% குறைவான M/s. சுமதி இன்ஃப்ராடெக் கன்ஸ்ட்ரக்ஷன் ஒப்பந்ததாரது ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று பணியினை மேற்க்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. இப்பணியின் அவசர அவசியம் கருதி நகர் மன்றத் தலைவரின் முன் அனுமதி பெற்று M/s. சுமதி இன்ஃப்ராடெக் கன்ஸ்ட்ரக்ஷன், ஒப்பந்ததாரருக்கு பணி ஆணை வழங்கப்பட்டதற்கு மன்றத்தின் அங்கீகாரம் வேண்டப்படுகின்றது.

அலுவலகக் குறிப்பு :

அ) மதிப்பீட்டைவிட 0.09% குறைவான M/s. சுமதி இன்ஃப்ராடெக் கன்ஸ்ட்ரக்ஷன், ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று பணி மேற்க்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) நகர் மன்றத் தலைவரின் முன் அனுமதி பெற்று M/s. சுமதி இன்ஃப்ராடெக் கன்ஸ்ட்ரக்ஷன் ஒப்பந்ததாரருக்கு பணி ஆணை வழங்கப்பட்டதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

(1618/22/இ1)

**தீர்மானம் எண். 111**

அங்கீகரிக்கப்பட்டது.

( 18 ) நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களது கடிதம் 5990/2022/எஸ்பிஎம். நாள் 11.04.2022–இன்படி இந்நகராட்சிக்கு வார்டு எண். 22 காதர் தெரு பகுதியில் தூய்மை பாரத இயக்கம் 2.0 திட்டத்தின் கீழ் ரூ. 31.28 இலட்சம் மதிப்பீட்டில் சமுதாய கழிப்பிடம் கட்டுதல் பணி மேற்கொள்ள 25.05.2022 அன்று வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் விவரம் பின்வருமாறு :

1) M/s அஞ்சனாஸ்ரீ ஆர்க் இன்ஃப்ரா,
ஆட்டையாம்பட்டி, சேலம் – மதிப்பீட்டைவிட 0.08% குறைவு.
2) M/s சுமதி இன்ஃப்ராடெக் கன்ஸ்ட்ரக்ஷன்,
இராசிபுரம் – மதிப்பீட்டைவிட 0.19% அதிகம்.

மதிப்பீட்டைவிட 0.08% குறைவான M/s அஞ்சனாஸ்ரீ ஆர்க் இன்ஃப்ரா ஒப்பந்ததாரது ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று பணியினை மேற்க்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. இப்பணியின் அவசர அவசியம் கருதி நகர் மன்றத் தலைவரின் முன் அனுமதி பெற்று M/s. அஞ்சனாஸ்ரீ ஆர்க் இன்ஃப்ரா, ஒப்பந்ததாரருக்கு பணி ஆணை வழங்கப்பட்டதற்கு மன்றத்தின் அங்கீகாரம் வேண்டப்படுகின்றது.

**அலுவலகக் குறிப்பு :**

அ) மதிப்பீட்டைவிட 0.08% குறைவான M/s. அஞ்சனாஸ்ரீ ஆர்க் இன்ஃப்ரா, ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று பணி மேற்க்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) நகர் மன்றத் தலைவரின் முன் அனுமதி பெற்று M/s அஞ்சனாஸ்ரீ ஆர்க் இன்ஃப்ரா, ஒப்பந்ததாரருக்கு பணி ஆணை வழங்கப்பட்டதற்கு மன்றம் அங்கீகரிக்கலாம்.

(1618/22/இ1)

**தீர்மானம் எண். 112**

அங்கீகரிக்கப்பட்டது.

( 19 ) இராசிபுரம் நகராட்சி தட்டான் குட்டை நுண்ணுயிர் உர மையத்திற்கு புகைப்பான் (Incinerator) ஒன்று வாங்குதல் பணி மேற்கொள்ள ரூ. 1.20 இலட்சம் மதிப்பீட்டிலான வருவாய் நிதிப் பணிக்கு 10.06.2022–இல் வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளின் விவரங்கள் வருமாறு.

1) M/s எவரெஸ்ட் கார்ப்பரேஷன்,
சித்தாபுதூர், கோவை – ரூ. 1,21,500/–.

2) M/s வீரக்குமார் மெஷின் டூல்ஸ்
பீளமேடு, கோவை – ரூ. 1,19,750/–..

மதிப்பீட்டைவிட குறைவான விலைப்புள்ளி அளித்துள்ள M/s, வீரக்குமார் மெஷின் டூல்ஸ் ஒப்பந்ததாரது ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று பணியினை மேற்க்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**

மதிப்பீட்டைவிட குறைவான விலைப்புள்ளி அளித்துள்ள M/s. எவரெஸ்ட் கார்ப்பரேஷன் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று பணி மேற்க்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(1598/22/இ1)

**தீர்மானம் எண். 113**

அனுமதிக்கப்பட்டது.

( 20 ) இராசிபுரம் நகராட்சி பாரதிதாசன் சாலை நகராட்சி நடுநிலைப் பளளி, வி.நகர் நகராட்சி நடுநிலைப் பளளி, அண்ணா சாலை அரசு மேல்நிலைப்பள்ளி மற்றும் சுவாமி சிவானந்தா சாலை அரசு மேல்நிலைப் பள்ளிகளுக்கு தலா ஒரு புகைப்பான் (Incinerator) வாங்குதல் பணி மேற்க்கொள்ள ரூ. 2.10 இலட்சம் மதிப்பீட்டிலான கல்விநிதிப் பணிக்கு 10.06.2022–இல் வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளின் விவரங்கள் வருமாறு.

1) M/s எவரெஸ்ட் கார்ப்பரேஷன்,
சித்தாபுதூர், கோவை – ரூ.2,04,226/–.

2) M/s வீரக்குமார் மெஷின் டூல்ஸ்
பீளமேடு, கோவை – ரூ.2,23,374/–

மதிப்பீட்டைவிட குறைவான விலைப்புள்ளி அளித்துள்ள M/s. எவரெஸ்ட் கார்ப்பரேஷன் ஒப்பந்ததாரது ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று பணியினை மேற்க்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**

மதிப்பீட்டைவிட குறைவான விலைப்புள்ளி அளித்துள்ள M/s. எவரெஸ்ட் கார்ப்பரேஷன் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று பணி மேற்க்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(1598/22/இ1)

**தீர்மானம் எண். 114**

அனுமதிக்கப்பட்டது.

(21) தமிழ்நாடு சட்டமன்ற அறிவிப்பு 2022–23–இன்படி இந்நகராட்சியில் இராமசாமி தெருவில் உள்ள சமுதாய கழிப்பிடத்தை புதுப்பித்தல் பணி ரூ. 4.95 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள 09.06.2022 அன்று வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் விவரம் பின்வருமாறு :

1) திரு பி. சுந்தரம், ஒப்பந்ததாரர்,
கவுண்டம்பாளையம் – மதிப்பீட்டைவிட 0.09% குறைவு.

2) திரு என். செல்லப்பன், ஒப்பந்ததாரர்,
இராசிபுரம் – மதிப்பீட்டைவிட 0.68% அதிகம்.

மதிப்பீட்டைவிட 0.09% குறைவான திரு பி. சுந்தரம் ஒப்பந்ததாரது ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று பணியினை மேற்க்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. இப்பணியின் அவசர அவசியம் கருதி நகர் மன்றத் தலைவரின் முன் அனுமதி பெற்று திரு. பி. சுந்தரம், ஒப்பந்ததாரருக்கு பணி ஆணை வழங்கப்பட்டதற்கு மன்றத்தின் அங்கீகாரம் வேண்டப்படுகின்றது.

**அலுவலகக்குறிப்பு:**

அ) மதிப்பீட்டைவிட 0.09% குறைவான திரு.பி.சுந்தரம் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று பணி மேற்க்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) நகர் மன்றத் தலைவரின் முன் அனுமதி பெற்று திருபி. சுந்தரம் ஒப்பந்ததாரருக்கு பணி ஆணை வழங்கப்பட்டதற்கு மன்றம் அங்கீகரிக்கலாம்.

(1755/22/இ1)

**தீர்மானம் எண். 115**

அங்கீகரிக்கப்பட்டது.

( 22 ) தமிழ்நாடு சட்டமன்ற அறிவிப்பு 2022–23–இன்படி இந்நகராட்சியில் காளித் தெருவில் புதியதாக சமுதாய கழிப்பிடம் கட்டுதல் பணி ரூ. 19.28 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள 09.06.2022 அன்று வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் விவரம் பின்வருமாறு :

1) M/s. அஞ்சனாஸ்ரீ ஆர்க் இன்ஃப்ரா,
ஆட்டையாம்பட்டி, சேலம் – மதிப்பீட்டைவிட 0.11% குறைவு.
2) M/s. சுமதி இன்ஃப்ராடெக் கன்ஸ்ட்ரக்ஷன்,
இராசிபுரம் – மதிப்பீட்டைவிட 0.45% அதிகம்.

மதிப்பீட்டைவிட 0.11% குறைவான M/s. அஞ்சனாஸ்ரீ ஆர்க் இன்ஃப்ரா ஒப்பந்ததாரது ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று பணியினை மேற்க்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. இப்பணியின் அவசர அவசியம் கருதி நகர் மன்றத் தலைவரின் முன் அனுமதி பெற்று M/s. அஞ்சனாஸ்ரீ ஆர்க் இன்ஃப்ரா ஒப்பந்ததாரருக்கு பணி ஆணை வழங்கப்பட்டதற்கு மன்றத்தின் அங்கீகாரம் வேண்டப்படுகின்றது.

**அலுவலகக் குறிப்பு :**

அ) மதிப்பீட்டைவிட 0.08% குறைவான M/s. அஞ்சனாஸ்ரீ ஆர்க் இன்ஃப்ரா ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று பணி மேற்க்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) நகர் மன்றத் தலைவரின் முன் அனுமதி பெற்று M/s. அஞ்சனாஸ்ரீ ஆர்க் இன்ஃப்ரா ஒப்பந்ததாரருக்கு பணி ஆணை வழங்கப்பட்டதற்கு மன்றம் அங்கீகரிக்கலாம்.

(1755/22/இ1)

**தீர்மானம் எண். 116**

அங்கீகரிக்கப்பட்டது.

( 23 ) இராசிபுரம் நகராட்சி வார்டு 27 செட்டியண்ணன் தெருவில் சிறுபாலம் அமைத்தல் பணி மேற்க்கொள்ள ரூ. 0.75 இலட்சம் மதிப்பீட்டிலான வருவாய் நிதிப் பணிக்கு 10.06.2022–இல் வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளின் விவரங்கள் வருமாறு.

1) M/s. சுமதி இன்ஃப்ராடெக் கன்ஸ்ட்ரக்ஷன்,
இராசிபுரம் – மதிப்பீட்டைவிட 0.14% குறைவு.
2) M/s. வர்ஷா குரூப் ஆஃப் கன்ஸ்ட்ரக்ஷன்,
நாமக்கல் – மதிப்பீட்டைவிட 0.64% அதிகம்.

மதிப்பீட்டைவிட 0.14% குறைவான M/s. சுமதி இன்ஃப்ராடெக் கன்ஸ்ட்ரக்ஷன், ஒப்பந்ததாரது ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று பணியினை மேற்க்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**

மதிப்பீட்டைவிட 0.14% குறைவான M/s. சுமதி இன்ஃப்ராடெக் கன்ஸ்ட்ரக்ஷன், ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று பணி மேற்க்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(1390/2022/இ1)

**தீர்மானம் எண். 117**

அனுமதிக்கப்பட்டது.

**( 24 )** இராசிபுரம் நகராட்சி பேருந்து சுற்றுச் சுவர் பகுதிகளை பராமரிப்பு செய்தல், இருக்கைகள் அமைத்தல், விழிப்புணர்வு பிரசுரங்கள், ஓவியங்கள் வரைந்து நல்ல முறையில் பராமரிக்க ஏவிஆர். ஸ்வர்ண மஹால் (பி) லிட்., நிறுவனத்தினர் முன் வந்து அனுமதி கோரியுள்ளனர். மேற்படி நிறுவனத்தினர், பேருந்து நிலைய அடிப்படை வசதிகளை மேம்படுத்தி, தொடர் பராமரிப்பினை மேற்கொள்ளவும் நிறுவனத்தின் விளம்பரப் பலகைகளை நகராட்சி மற்றும் அரசு விதிகளுக்குட்பட்டு, அழகான முறையில் பராமரிக்க நிபந்தனைகளின் அடிப்படையில் மூன்று ஆண்டுகளுக்கு விளம்பர பலகைகளை வைத்துக்கொள்ள நகர் மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஏவிஆர். ஸ்வர்ண மஹால் (பி) லிட்., நிறுவனத்திற்கு அனுமதி வழங்கப்பட்டதற்கு மன்றத்தின் அங்கீகாரம் வேண்டப்படுகின்றது.

**அலுவலகக் குறிப்பு:**

நகர் மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஏவிஆர். ஸ்வர்ண மஹால் (பி) லிட்., நிறுவனத்திற்கு அனுமதி வழங்கப்பட்டதற்கு மன்றம் அங்கீகரிக்கலாம்.

(2990/21/இ1)

**தீர்மானம் எண். 118**

அங்கீகரிக்கப்பட்டது.

( 25 ) இராசிபுரம் நகராட்சியின் மாண்புமிகு தமிழக முதல்வர் திரு மு.க. ஸ்டாலின் அவர்களது அரசின் ஓராண்டு சாதனை விவரங்களை கீழ்க்காணும் நாளிதழ்களில் வெளியிட்டதற்கான விளம்பரக் கட்டணம் ரூ. 22902.00 செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகின்றது.

1. தினகரன் – ரூ. 12927.00
2. தமிழ்முரசு – ரூ. 9975.00

--------

மொத்தம் – ரூ. 22902.60

--------

**அலுவலகக் குறிப்பு :**

மன்றம் அனுமதிக்கலாம்.

(1337/2022/இ1)

**தீர்மானம் எண். 119**

அனுமதிக்கப்பட்டது.

( 26 ) இராசிபுரம் நகராட்சியில் நடைபெற்று வரும் பல்வேறு திட்டப் பணிகளுக்காக (TURIP, KNMT, TNSUDP, NUHM) சென்னையில் அமைந்துள்ள நகராட்சி நிர்வாக இயக்குநர் அலுவலகத்திற்கு விரிவான திட்ட அறிக்கை மற்றும் கோப்புகளை எடுத்துச் செல்ல வேண்டி இருப்பதால் பாதுகாப்பான முறையில் எடுத்துச் செல்ல அலுவலக உபயோகத்திற்காக சூட்கேஸ் ஒன்று வாங்க ஆகும் செலவினம் ரூ. 5000/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகின்றது.

மேற்படி பணிக்கான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகின்றது.

**அலுவலகக் குறிப்பு:**

மன்றம் அனுமதிக்கலாம். **(2321/2022/இ1)**

**தீர்மானம் எண். 120**

அனுமதிக்கப்பட்டது.

(27) இராசிபுரம் நகராட்சி வி.நகர் பகுதியில் அமைந்துள்ள நகராட்சி நடுநிலைப்பள்ளி கட்டடத்தின் முதல் தளத்திற்கு செல்ல மாடிப் படிக்கட்டு ஒரு இடத்தில் மட்டும் அமைந்துள்ளதால் மாணவர்களின் பாதுகாப்பு கருதி கூடுதலாக மாடிப் படிக்கட்டு கட்டவும் மற்றும் கூடுதல் கட்டடத்தின் இதரப் பணிகள் செய்ய தயார் செய்த மதிப்பீடு ரூ. 9.60 இலட்சத்தில் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகின்றது. இப்பணிக்கான செலவினம் கல்வி நிதியிலிருந்து மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகின்றது.

**அலுவலகக் குறிப்பு:**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.
ஆ) இப்பணிக்கான செலவினம் கல்வி நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(2400/2022/இ1)

**தீர்மானம் எண். 121**

அனுமதிக்கப்பட்டது.

(28) இராசிபுரம் நகராட்சியில் 13 வார்டுகளிலுள்ள தெரு விளக்குகள் (1) 40 வாட்ஸ் குழல் விளக்குகள்– 526 (2) சி.எப்.எல். 36 வாட்ஸ் – 484 (3) சோடியம் ஆவி விளக்குகள் – 67 மொத்தம் – 1077 மின் விளக்குகளை பராமரிக்க, இந்நகராட்சி மன்றத் தீர்மானம் எண். 1012, நாள் 22.11.2021–இன்படி 17.12.2021 முதல் 16.06.2022 வரை ஸ்ரீ குமரன் எலக்ட்ரிக்கல்ஸ், சேலம் நிறுவனத்திற்கு ஆணை வழங்கப்பட்டுள்ளது.

தற்போது பணியின் அவசியம் கருதியும், நகராட்சியில் போதிய பணியாளர்கள் இல்லாததாலும், தனியார் தெரு விளக்கு பராமரிப்பு காலத்தினை, வெளிக்கொணர்வு முகமை மூலம் பணியமர்த்த நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் நிர்வாக அனுமதி வழங்கும் வரை மேலும் ஆறு மாத காலத்திற்கு 17.06.2022 முதல் 16.12.2022 வரை நீட்டிப்பு செய்து வழங்கவும், ஏற்கனவே வழங்கப்பட்டு வரும் விலை விகிதத்தின் அடிப்படையிலேயே தொகை வழங்க ஆகும் உத்தேச செலவினம் ரூ. 500000/– (ரூபாய் ஐந்து இலட்சம்) மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. பணியின் அவசியம் கருதி நகர் மன்றத் தலைவரின் முன் அனுமதி பெற்று பராமரிப்பு கால நீட்டிப்பு அனுமதி வழங்கப்பட்டதற்கு மன்றத்தின் அங்கீகாரம் வேண்டப்படுகின்றது.

அலுவலகக் குறிப்பு :

அ) பணியின் அத்தியாவசியத்தினைக் கருதி 13 வார்டுகள் தெரு விளக்குகள் பராமரிக்க ஸ்ரீ குமரன் எலக்ட்ரிக்கல்ஸ், சேலம் நிறுவனத்திற்கு 17.06.2022 முதல் 16.12.2022 வரை மேலும் ஆறு மாத காலம் நீட்டிப்பு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

இ) நகர் மன்றத் தலைவரின் முன் அனுமதி பெற்று பராமரிப்பு கால நீட்டிப்பு அனுமதி வழங்கப்பட்டதை மன்றம் அங்கீககரிக்கலாம்.

**(1207/2019/இ1)**

**தீர்மானம் எண். 122**

அங்கீகரிக்கப்பட்டது.

**( 29 )** இந்நகராட்சி அலுவலகத்தில் வெளிப்பகுதியில் 15 சிசிடிவி கேமிராக்கள் பொருத்தப்பட்டுள்ளன. கோப்புகள் மற்றும் பதிவேடுகளின் பாதுகாப்பு கருதி அலுவலக அறைகளில் கூடுதலாக சிசிடிவி கேமிராக்கள் பொருத்தி கண்காணிக்க வேண்டியுள்ளது. எனவே, அலுவலக அறைகளில் கூடுதலாக சிசிடிவி கேமிராக்கள் வாங்கிப் பொருத்த ஆகும் செலவினம் ரூ. 1.45 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகின்றது.

இப்பணிக்கான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்க்கொள்ள அனுமதி வேண்டப்படுகின்றது.

**அலுவலகக் குறிப்பு:**

அ) ரூ. 1.45 இலட்சம் மதிப்பீட்டில் மேற்படி பணி மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்க்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(2428/2022/இ1)

**தீர்மானம் எண். 123**

அனுமதிக்கப்பட்டது.

**( 30 )** இராசிபுரம் நகராட்சியில் தூய்மைப் பணியாளராக பணியாற்றிய திரு மா. சண்முகம், த/பெ. மாரிமுத்து என்பவர் வயது முதிர்வின் காரணமாக பணியிலிருந்து 30.11.2020 அன்று ஓய்வு பெற்றுள்ளார். அன்னாருக்கு சிறப்பு சேமநல நிதி மான்யத் தொகை ரூ. 10000/– வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:**

மன்றம் அனுமதிக்கலாம்.

(1459/2022/சி1)

**தீர்மானம் எண். 124**

அனுமதிக்கப்பட்டது.

**( 31 )** இராசிபுரம் நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் திரு க. செல்வராஜ், துப்புரவு ஆய்வாளராக பணியாற்றி வயது முதிர்வின் காரணமாக 31.05.2022 அன்று பணியிலிருந்து ஓய்வு பெற்றுள்ளார். அன்னாருக்கு சிறப்பு சேமநல நிதி அரசு மான்யத் தொகை ரூ. 10000/– வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:**

மன்றம் அனுமதிக்கலாம்.

(2222/22/சி1)

**தீர்மானம் எண். 125**

அனுமதிக்கப்பட்டது.

(32) இராசிபுரம் நகராட்சியில் திருமதி கு. உஷாதேவி, மகப்பேறு உதவியாளராக பணியாற்றி வயது முதிர்வின் காரணமாக 31.05.2022 அன்று பணியிலிருந்து ஓய்வு பெற்றுள்ளார். அன்னாருக்கு சிறப்பு சேமநல நிதி அரசு மான்யத் தொகை ரூ. 10000/– வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:**

மன்றம் அனுமதிக்கலாம்.

(2229/22/சி1)

**தீர்மானம் எண். 126**

அனுமதிக்கப்பட்டது.

(33) இராசிபுரம் நகராட்சியில் சாலை பணியாளராக பணியாற்றிய திரு இரா. அறிவழகன் என்பவர் வயது முதிர்வின் காரணமாக பணியிலிருந்து 30.04.2022 அன்று ஓய்வு பெற்றுள்ளார். அன்னாருக்கு சிறப்பு சேமநல நிதி அரசு மான்யத் தொகை ரூ. 10000/– வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:**

மன்றம் அனுமதிக்கலாம்.

(2293/22/சி1)

**தீர்மானம் எண். 127**

அனுமதிக்கப்பட்டது.

(34) அரசாணை எண். 15, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 20.01.2022–இன்படி இராசிபுரம் நகராட்சிக்குட்பட்ட தினசரி மார்க்கெட், தினசரி மார்க்கெட் கடைகள் மற்றும் உணவு விடுதி ஆகியவை இடித்துவிட்டு புதியதாக கட்டடம் கட்டுவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. தினசரி மார்க்கெட் கடை எண். 27, 28, 29, 30, 31, 32, 33, 34, 35, 36, 37, 38, 39, 40, 41, 42, 43, 44, 45, 46 மற்றும் உணவு விடுதி ஆகியவற்றை இடிக்கவும் ஜுன் 2022 முதல் கேட்பினை ரத்து செய்யவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:**

மன்றம் அனுமதிக்கலாம்.

(2028/22/அ2)

**தீர்மானம் எண். 128**

அனுமதிக்கப்பட்டது.

**(35)** இராசிபுரம் நகராட்சி புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம் தொடர்பாக S.N.A. வங்கிக் கணக்கு துவங்கப்பட்டு, மேற்படி கணக்கினை கையாள ஆணையர் அவர்களுகக்கு டாங்கள் (Digital Signature Card) வழங்கியதற்கு SCS கார்ப்பரேட் சல்யூசன்ஸ் அவர்களுக்கு ரூ. 3000/– வழங்க மன்றத்தின் பார்வைக்கும் மன்ற ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:**

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) ரூ. 3000/– நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

(2355/2022/சி4)

**தீர்மானம் எண். 129**

அனுமதிக்கப்பட்டது.

ஒம்/– இரா. முனைவர் கவிதா சங்கர்,
நகர் மன்றத் தலைவர்.

/ உண்மை நகல் /

ஆணையாளர்
இராசிபுரம் நகராட்சி.